# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 1

FATIMA COLLEGE
MADURAI



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி** (தன்னாட்சி)

மதுரை - 18

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

ISBN: 978-93-87865-06-8

தொகுதி – 1

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. பாப்பி கமலா பாய், தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி

முனைவர் இரா. டயானா கிறிஸ்டி

முனைவர் இரா. ஏஞ்சல்

திருமதி பா. திவ்யா

திருமதி டே. ஆனி மரிய ஜான்சி

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | திருவிவிலியச் சமத்துவம் | முனைவர் அஞ்சலி அன்னபாய் இராஜசேகரன் | 1 |
| 2. | மனிதம் | திரு.அருள்ராஜ் திலக், அ. | 6 |
| 3. | நீதிமொழியில் அறம் | முனைவர் அலிஸ்ராணி, ப. | 8 |
| 4. | திருவிவிலியம் காட்டும் பெண்ணியச் சிந்தனை | திருமதி. அனிதா ஜூடிட், ஞா. | 11 |
| 5. | திருவிவிலியத்தில் பெண்கள் சார்ந்த மதிப்புகள் | முனைவர் அன்புராணி, செ. | 14 |
| 6. | "திருப்பாடல்கள்" முன்வைக்கும் இறை மன்றாட்டுகள் | செல்வி ஆனந்தவள்ளி, த. | 18 |
| 7. | சபைநூல் உணர்த்தும் உறவுநலம் | திருமதி. ஆனி மரிய ஜான்சி, டே. | 22 |
| 8. | விவிலியத்தில் மனித நேயச் சிந்தனைகள் | திரு. ஏசுதாஸ், வ. | 25 |
| 9. | மதிப்பீடு - மதிப்பு இழப்பு - மீள்மதிப்பீடு | முனைவர் ஏஞ்சல், இரா. | 27 |
| 10. | அன்பினால் இணைக்கப்பட்ட சகோதரத்துவம் | முனைவர் ஜூலி ஜெனோ, சு. | 30 |
| 11. | திருவிவிலியத்தில் காட்டப்படும் மனித மதிப்பீடுகள் | முனைவர் கலையரசி, ம. | 32 |
| 12. | "லூக்கா நற்செய்தி" உவமைகள் வெளிப்படுத்தும் விழுமியங்கள் | செல்வி கற்பகவள்ளி, மு. | 36 |
| 13. | திருவிவிலியத்தில் மனித நேயம் | முனைவர் காந்திமேரி, எம்.ஸ். | 40 |
| 14. | கிறித்தவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | திரு. கிறிஸ்டியன் ஹீலர், தா. | 43 |
| 15. | இறைவேண்டலும் இனிய வாழ்வும் | திருமதி. சகாய ஹில்டா மேரி, வே. | 46 |
| 16. | திருவிவிலியம் காட்டும் குடும்பம் குறித்த கட்டமைப்பு | முனைவர் சாந்தி, ப. | 49 |
| 17. | விவிலியத்தில் துயிலியலும் அது சார்ந்த மக்கள் வாழ்க்கை முறைகளும் | முனைவர் சாமுவேல் வெஸ்லி, தே. | 52 |
| 18. | திருவிவிலியத்தில் பெண்கள் (ரூத்து) | திருமதி. சிவகாமி, ம. | 58 |
| 19. | புதிய ஏற்பாட்டில் வாழ்வியல் நெறிகள் | முனைவர் சிவகாமி, ஆ. | 60 |
| 20. | விவிலியம் காட்டும் வாழ்வியல் | முனைவர் சுப்புலெட்சுமி, கோ. | 63 |
| 21. | முதிர்வயது - மனிதனின் கீழ்ப்படிதலும் கடவுளின் ஆசிர்வாதமும் | திருமதி சோபியா அடைக்கல மேரி,வ. | 65 |
| 22. | ஆதியாகமம் வழி கிறிஸ்தவமும் கீழ்ப்படிதலும் | முனைவர் டயானா கிறிஸ்டி, இரா. | 68 |
| 23. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | அருட்பணி முனைவர் பெஞ்சன் லெட்டர், இரா.செ. | 72 |
| 24. | திருவிவிலியத்தில் பெண்கள் நிலை | திரு.தட்சிணாமூர்த்தி, இரா. | 75 |
| 25. | நீதிமொழிகளும் திருக்குறளும் | செல்வி தேன்மொழி, அ. | 78 |
| 26. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | முனைவர் நிரஞ்சனா தேவி, இரா. | 83 |
| 27. | இயேசு காட்டும் மனித நேயம் | அருள்சகோ. பாத்திமா மேரி, ம. | 85 |
| 28. | திருவிவிலியம் தரும் அமைதிவாழ்வு | முனைவர் பாப்பி கமலாபாய், அ. | 88 |

# சபைநூல் உணர்த்தும் உறவுநலம்

டே. ஆனி மரிய ஜான்சி
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 18

செலூக்கியரின் ஆட்சிக் காலத்தின் போது, யூதர்கள் கிரேக்க மொழி, பண்பாடு, வழிபாட்டு முறை போன்றவற்றைக் கடைபிடிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். யூதர்களுள் பலர் இதனை விரும்பி ஏற்றுக்கொண்டனர். இச்சூழலில் (ஏறத்தாழ கி.மு.180) சீராக்கின் மகனும் எருசலேமில் வாழ்ந்த மறைநூலறிஞருமான ஏசு என்பவர் 'சீராக்கின் ஞானம்' என்ற நூலை எழுதினார். இதன்வழி, இஸ்ரயேல் மக்களின் மீட்பு வரலாறு குறித்தும், திருச்சட்டத்தைக் கடைபிடிப்பதன்வழி, ஞானத்தைப் பெறும் முறை குறித்தும் யூதர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் ஒருவர் மற்றவரோடு கொண்டிருக்க வேண்டிய உறவுநிலை குறித்தும் இந்நூல் தெளிவாகச் சுட்டிச் செல்கிறது. தொடக்கத் திருச்சபையில் 'திருப்பாடல்கள்' நூலுக்கு அடுத்தபடியாக இந்நூல் திருவழிபாட்டிலும் மறைக்கல்வியிலும் மிகுதியாகப் பயன்பட்ட காரணத்தால், இது 'சபைநூல்' என்றும் பெயர்பெற்றது.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பல கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பிறரைச் சார்ந்து வாழும் மனிதன், எவ்வாறு மற்றவருடன் சுமுகமான உறவை மேற்கொள்வது என்பதை இந்நூல் உணர்த்துகின்றது.

**கடவுள் - மனித உறவு**

மனிதனே நீ மண்ணாய் இருக்கின்றாய்; மண்ணுக்கே திரும்புவாய் என்ற இறைவார்த்தையின் படி, "ஆண்டவர் மனிதரை மண்ணால் படைத்தார்; மீண்டும் அந்த மண்ணுக்கே திரும்புமாறு செய்கிறார். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலவரையை வகுத்தார்; மண்ணுலகில் உள்ளவற்றின் மீது அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். தமக்கு உள்ளதைப் போன்ற வலிமையை அவர்களுக்கு வழங்கினார்; தமது சாயலாகவே அவர்களை உருவாக்கினார். எல்லா உயிரினங்களும் மனிதருக்கு அஞ்சும்படி செய்தார்; விலங்குகள், பறவைகள் மீது அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். தம் ஐந்தறிவைப் பயன்படுத்தும் உரிமையை ஆண்டவர் அவர்களுக்கு அளித்தார்; ஆறாவதாகத் தம் அறிவுத்திறனில் பங்கு கொடுத்தார்; அந்த ஆறறிவையும் விளக்கும் பகுத்தறிவை ஏழாவது கொடையாக வழங்கினார். விருப்புரிமை, நாக்கு, கண், காது ஆகியவற்றையும் சிந்திப்பதற்கு ஓர் உள்ளத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களை அறிவாலும் கூர்மதியாலும் நிரப்பினார்; நன்மை தீமையையும் அவர்களுக்குக் காட்டினார்".(சீ.ஞா. 17:1-7)

ஆண்டவர் தம் மக்கள் ஞானமிக்கவர்களாக வாழ விரும்பினார். அத்தகைய ஞானம் கடவுளிடமிருந்தே வரும். ஞானத்தை அடைய நாம் கொண்டிருக்க வேண்டியது ஒன்றே, இறையச்சம். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் பாவங்களை விரட்டி விடுகிறது. அது இருக்கும்போது சினத்தையெல்லாம் அகற்றிவிடுகிறது". (சீ.ஞா.1:21). எனவே ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமானது, மனிதனைப் பக்குவப்படுத்துகிறது; நல்வழிப்படுத்துகிறது. இதன்வழி அழியாத ஞானத்தை அருள்கின்றது.

இன்றைய சூழலில் உறவின் உன்னதம் மறந்து பணத்தையும் அறிவையும் நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் நாம் சற்று நிதானித்து என்றும் அழியா ஞானத்தைப் பெற விரும்புவோமேயானால் மறைநூலறிஞர் ஏசு நமக்கு வழிகாட்டுகிறார். "ஞானத்தை நீ அடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி; அப்போது ஆண்டவரே உனக்கு ஞானத்தை வாரி வழங்குவார்". (சீ.ஞா.1:26) என்பதை உணர்ந்தவர்களாய் இறைவன் நமக்காய் அருளிய கட்டளைகளை, எத்தகைய சூழலிலும் கடைபிடிக்கும் மனமுதிர்ச்சி பெற்றவர்களாக வாழ்ந்து, நம்மையும் பிறரையும் வாழ்விக்கும் ஞானத்தை நமதாக்கிக் கொள்வோம். அதன்படி இறைவனின் அன்புப்பிள்ளைகளாக என்றும் வாழ்வோம்.

**கணவன் - மனைவி உறவு**

மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று என அவனுக்கு சரிநிகரான துணையை உண்டாக்கினார் ஆண்டவர். நல்ல மனைவியே ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து என்கிறார் நூலாசிரியர். "பெண்ணின்